# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUPALAYAM

# DEPOSITION OF WITNESS

# O.S.308/2018

# CNR.No.TNCB19000

Date:28.01.2025 PW1

| பெயர் | இந்திராணி | வயது | 62 |
|---|---|---|---|
| த/பெ | சுப்ரமணியன் | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | பட்டக்காரம்பாளையம் | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 28th January 2025

**வா.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு 2 ம் பிரதிவாதி தரப்பில்** குறுக்கு விசாரணை

**2-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வழக்குச் சொத்தின் க.ச.எண். 850 என்றால் சரிதான். தாவா சொத்து 3 ஏக்கர் 12 செண்ட் ஆகும். எந்த ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்து 3 ஏக்கர் 12 செண்ட் என்று சொல்கிறேன் என என்னால் குறிப்பிட்டு கூற முடியாது என்றால் எனது அப்பாவின் பத்திரத்தை வைத்து சாட்சி சொல்கிறேன். 3 ஏக்கர் 12 செண்ட் எந்த பத்திரத்தில் உள்ளது என்றால் என்னுடைய சொத்து பத்திரத்தில் உள்ளது. நான் சொல்வதுபோல் எந்த பத்திரத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாவா சொத்து 3 ஏக்கர் 12 செண்ட் என்று சொல்லிவிட்டு தாவா பிராதில் 2 ஏக்கர் 98-1/2 செண்ட் என்று குறிப்பிட்டிருக்கிறேன் என்றால் சரியல்ல.

தாவா சொத்திற்குண்டா வருவாய் ஆவணங்களை தாக்கல் செய்திருக்கிறேனா அல்லது பார்த்திருக்கிறேனா என்றால் கொடுத்திருக்கிறேன். வருவாய் ஆவணங்கள் யாருடைய பெயரில் உள்ளது என்றால் பட்டா எனது அப்பாவின் பெயரில் இருந்தது. தற்போது யாருடைய பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வழக்கு சொத்தின் விபரங்களை சரிபார்த்து தாக்கல் செய்தேனா என்றால் வருவாய் ஆவணங்களை பார்த்து தாக்கல் செய்தேன். வருவாய் ஆவணங்கள் தற்போது என்னிடம் உள்ளதா என்றால் என்னிடம் உள்ளது. அந்த வருவாய் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்ய முடியும்.

2006 ம் வருடம் 1ம் பிரதிவாதி சொசைட்டியில் இரண்டு கடன்களை

அடைத்திருக்கிறார் என்றால் சரிதான். எனது அப்பா வாங்கிய கடன்களை எல்லோரும் சேர்ந்து அடைத்தோம். அவ்வாறு கடன்களை அடைத்ததற்கு ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் எனது அண்ணனிடம் கொடுத்து அடைத்தோம். நான் தவறாக சொல்கிறேன் என்றும் 1ம் பிரதிவாதி மாதைய்ய கவுடர் 1971 மற்றும் 1990 ஆகிய வருடங்களில் காரமடை கூட்டுறவு தொடக்க வேளாண்மை ஊரக வளர்ச்சி வங்கியில் பெற்ற இரண்டு கடன்களையும் 30.01.2006 ம் தேதி கடனை அடைத்து மேற்படி சொசைட்டியில் இருந்து செல் ரசீது 1ம் பிரதிவாதியின் பெயருக்கு பதிவு எண். 564/2006 ஆவணத்தின்படி பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதால் நாங்கள் கடனை அடைத்ததாக சொல்வது தவறு என்றால் சரியல்ல.

1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதியின் பெயரில் ஒரு செட்டிமெண்ட் ஆவணம் எழுதி கொடுத்ததாக எனது விசாரணையில் சொல்லியிருக்கிறேன் என்றால் அதுபோல் சொல்லவில்லை. இந்த ஆவணத்தை இந்த வழக்கில் வா.சா. ஆ 8 ஆக தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் வழக்கு தாக்கல் செய்து பின்னர் எதிர் வழக்குரை தாக்கல் செய்த பின்னரே 2ம் பிரதிவாதியின் பெயரில் செட்டில்மெண்ட் ஆவணம் இருந்த விபரம் எனக்கு தெரியும். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு சொத்து விபரங்கள் குறித்து பதிவு அலுவலகத்தில் பார்த்தேனா என்றால் பார்த்தேன். சாட்சி மீண்டும் வழக்கு தாக்கல் செய்த பின்னர் பார்த்ததாக சொல்கிறார்.

எனக்கு வழக்கு சொத்து 2ம் பிரதிவாதி பெயரில் இருந்த விபரம் தெரியும் என்றும் தற்போது வழக்கிற்காக வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் தெரியும் என்றும் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் வருவாய் ஆவணங்கள் 2ம் பிரதிவாதியின் பெயருக்கு ஏற்கனவே மாற்றப்பட்ட விபரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. பத்திரம் பதிவு செய்தது தவறு என்றும் அது செல்லாது என சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்தேனா என்றால் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. எங்களது சொத்தை எங்களுக்கு தெரியாமல் எழுதி கொடுத்து விட்டார். தாவா சொத்து 2ம் பிரதிவாதியின் வசம் உள்ளது என்றால் தவறு. கூட்டாக தான் இருக்கின்றோம்.

அவ்வாறு கூட்டாக தான் இருக்கிறோம் என்பதை காண்பிக்க எதாவது ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. ஆனால் ஒன்றாக அனுபவித்து வருகிறோம். நான் தாவா சொத்தில் விவசாயம் செய்து வந்தததற்கான ஆவணம் உள்ளதா என்றால் எல்லோரும் ஒன்றாக தான் விவசாயம் செய்து வந்தோம். நானும் சேர்ந்து தாவா சொத்தில் விவசாயம் செய்து வந்ததற்கு ஆவணம் எதுவும் இல்லை. நான் ஒரு போதும் தாவா சொத்தில் கூட்டு சுவாதீனத்தில் இருந்ததில்லை என்றால் சரியல்ல. நான் 1979 ம் ஆண்டிலேயே திருமணம்

ஆகி எனது கணவரின் ஊருக்கு சென்று விட்டதால் எனக்கும் 1ம் வாதிக்கும் தாவா சொத்தில் எந்தவித உரிமையும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. வழக்குச் சொத்து ஏற்கனவே ரங்கப்ப கவுண்டரின் மகன்களுக்கு மாற்றப்பட்டது என்றும் நான் தற்போது வாரிசு அடிப்படையில் தாவா சொத்தில் எந்த உரிமையும் கோர முடியாது என்றால் சரியல்ல. நான் ஏற்கனவே என்னுடைய முன் விசாரணையி ல் தாவா சொத்தில் குடியிருக்கவில்லை திருமணம் ஆகி வேறு இடத்திற்கு சென்று விட்டதாக சொல்லி விட்டதால் தாவா சொத்தில் உரிமை கோர இயலாது என்றால் சரியல்ல.

ரங்கப்ப கவுடர் எப்போது இறந்தார் என்றால் நான் பிறப்பதற்கு முன்பாக இறந்து விட்டார் எனக்கு ஞாபகம் இல்லை. 1ம் வாதி சுப்புலட்சுமி எப்போது பிறந்தார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. நான் பிறப்பதற்கு முன்பே எனது தாத்தா ரங்கப்ப கவுண்டர் இறந்து விட்டதால் தாவா சொத்தில் எனக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. ரங்கப்பனுடைய ஆண் மக்களுக்கு மட்டும்தான் தாவா சொத்து பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. அந்த வகையில் 1ம் பிரதிவாதி அனுபவித்து வந்து 2ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணம் செல்லத்தக்கது என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தில் சுவாதீனத்தில் இல்லாததால் நான் செலுத்திய நீதிமன்ற கட்டணம் தவறானது என்றால் சரியல்ல.

தாவா சொத்தின் முழு மதிப்பிற்கு கட்டணம் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் 2ம் பிரதிவாதிதான் உரிமையிலும் சுவாதீனத்திலும் இருந்து அனுபவித்து வருகிறார் என்றும் நான் உண்மையை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்திருப்பதால் சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. வழக்கில் சொல்லி உள்ள விபரங்கள் தவறானது என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

Sd/-K.Palanivel,

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம் மேட்டுப்பாளையம்.